மாம்பழச்சாறு

திதிரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1971-ஆம் ஆண்டில், வட ஆர்க்காடு மாவட்டத்திலிருந்து, அதிக அளவு மாம்பழச்சாறு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : (a) & (b) A quantity of 80 tonnes of mango juice was exported to the Soviet Union during **1971.**

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, எந்த மாம்பழத்தின் சாறு அதிகப்படியாக சோவியத் யூனியனில் விரும்பப்படுகிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : எந்த மாம்பழம் என்று கேட்டார் கள். எந்த வகை என்று கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை. மாம்பழத்தின் சாறு என்றுதான் என்னிடம் இருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : அது புளித்த சாறு, இனித்த சாறு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இனித்த சாறு; டின்னில் அடைக்கப்பட்டது.

Committee for Cotton Development

* 86 *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are any proposals under the consideration of the Government to set up a Committee for Cotton Development ; and

(*b*) if so, the details thereof ?

பருத்தி வளர்ச்சிக் குழு

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பருத்தி வளர்ச்சிக் குழு ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) நிறுவப்பட இருக்கின்ற குழுவினைப்பற்றிய முடிவான தீர்மானம் ஏதும் இதுவரை எடுக்கப்படாததால் தற்போது இதுபற்றி எவ்வித தகவலும் அளிக்க இயலவில்லை.

[1st February 1972

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether it is proposed to set up an agency for cotton development or to appoint a Committee to go into the question of cotton development?

THE HON. THIRU A. P. DHARMALINGAM : 'Committee' தான்.

Taxi Stand

* 87 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether any proposals have been sent to the Railways by the Commissioner of Police about the taxi stand facilities in the Central Station; and

(b) if so, the details thereof?

வாடகைக் கார் நிறுத்துமிடம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்ட்ரல் இரயில் நிலையத்தில் வாடகைக் கார்கள் நிறுத்துமிடத்திற்கான வசதிகள் கோரி, காவல் துறைக் கமிஷனருக்கு இரயில்வே துறை செயற்குறிப்புகள் எதையேனும் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) காவல்துறைக் கமிஷனர் சென்னை மாநகர்சாலை மேம்பாடு போக்குவரத்துத் திட்டக் குழுவின் தலைவராவர். இவர் பக்கிங்ஹாம் கால்வாயின் மேற்கு புறத்தில் கூடுதலாகப் புகைவண்டி மேடை ஒன்றைக் கட்டி அங்கு நேரடியாகப் புகை வண்டிகள் வந்து சேரவும், இரயில் பயணிகள் மூர் அங்காடிப் பகுதி வழியாக வெளியேற வழி ஒன்றை அமைக்கவும் வகை செய்யும் செயற்குறிப்புக்கு ஆதரவாக 7-2-1970 நாளன்று தமது கருத்துக்களை எழுதினர். இச் செயற்குறிப்பு தென் பிராந்திய ரயில்வே நிர்வாகத்தினர் அனுப்பியதாகும். மத்திய இரயில் நிலையத்தில் வாடகை மோட்டார் வண்டிகளை நிறுத்துவதற்கான வசதிகளைப் பெருக்க இச் செயற்குறிப்பு வகுக்கப்பட்டது. இச் செயற்குறிப்பினை தென் பிராந்திய இரயில்வே நிர்வாகத்தினரும், தமிழ் நாடு அரசும் பரிசீலனை செய்து வருகின்றன.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொல்லிய கருத்து ஒரு நீண்டகாலத் திட்டம் பற்றியதாக இருக்கிறது. இப்போது இந்த ரயில் நிலையத்தில் வாடகைக் கார்கள் நிறுத்துவதற்கு என்ன வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப்போது மேலும் ஒரு பாதை இரண்டாவது கேட் என்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு 25 டாக்சிகள் நிறுத்துவதற்குக் கூடுதலான வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே 65 டாக்சிகள் நிறுத்துவதற்கு ஏற்பாடுகள் உள்ளன.